# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529
Fax No: 044-28516574

CITU

Email: coteecitu_hqchennai@yahoo.com
coteecitu@gmail.com


**சுற்றறிக்கை எண் 2/2013** **நாள் : 18/01/2013**

*பெறுநர்*

***மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,***
***கிளைச் செயலாளர்கள் மற்றும்***
***மாநில செயற்குழு உறுப்பினர்கள்.***

அன்பான தோழரே, வணக்கம்

நாளும் உயரும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்து என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வைத்து மத்திய தொழிற்சங்கங்கள், தொழில் வாரியான சம்மேளனங்கள் இணைந்தும் மாபெரும் போராட்டங்களை நடத்திக் கொண்டுள்ள இத்தருணத்திலேயே, டீசல் மற்றும் பெட்ரோல் விலை உயர்வை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு நிர்ணயம் செய்வதிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் டீசல் விலையை குறைக்கவோ உயர்த்தவோ எண்ணெய் நிறுவனங்களுக்கு அனுமதி அளித்து அறிவிப்பு வெளியிட்ட அடுத்த நிமிடமே டீசல் ஒரு லிட்டருக்கான விலையை 0.50 காசுகள் உயர்த்தி அதன் மூலம் அனைத்து பொருட்களின் விலைகளும் உயர்வதால் சாதாரண மக்கள் கொடுமைக்குள்ளாகும் நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளது.

இரண்டாண்டு காலமாக மத்திய தொழிற்சங்கங்கள்,துறைவாரியான சம்மேளனங்கள் 10 அம்ச கோரிக்கைகளை முன் வைத்து கடுமையான போராட்டங்களை நடத்திய பின்னரும் அதன் மீது பேச்சு வார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு மாறாக தொடர்ச்சியாக தாக்குதலை உழைக்கும் மக்கள் மீது மத்திய அரசு தொடுத்துக் கொண்டுள்ளது.

இச்சூழ்நிலையில்தான் மத்திய தொழிற்சங்கங்களும், தொழில் வாரியான சம்மேளனங்களும் விடுத்த அறைகூவலான பிப்ரவரி 20-21 தேதிகளில் 48 மணி நேர வேலை நிறத்தத்தை மின் அரங்கத்தில் வெற்றிகரமாக நடத்திட வேண்டுமென மின் ஊழியர் மத்திய அமைப்பின் கோவை மாநாடு முடிசெய்தது. மேலும் இந்த வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட மின் வாரியத்தில் உள்ள இதர சங்கங்களையும் ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் மாநாடு முடிவு செய்தது.

கோவை மாநாட்டின் முடிவின் அடிப்படையில் மத்திய தொழிற்சங்கங்களோடு இணைந்துள்ள தொழிற்சங்கங்களான தமிழ்நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம், தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு (சி.ஐ.டி.யு), தொழிலாளர் முன்னேற்ற சங்கம் (எல்.பி.எப்), தமிழ்நாடு தேசிய தொழிலாளர் சம்மேளனம் (ஐ.என்.டி.யு.சி), தொழிலாளர் ஐக்கிய சங்கம் (எச்.எம்.எஸ்), மின்வாரிய பாரதீய மஸ்தூர் சங்கம் (பி.எம்.எஸ்) ஆகிய தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுக் கூட்டம் 17.1.2013 அன்று சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தலைமையில் சி.ஐ.டி.யு சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

***அக் கூட்டத்தில்....***

- மேற்கூறிய தொழிற்சங்கங்கள் பிப்ரவரி 20 - 21 48 மணி நேர வேலை நிறுத்தத்தில் முழுமையாக கலந்து கொள்வது.

* வேலை நிறுத்த அறிவிப்பை முறையாக நிர்வாகத்திற்கு உரிய காலத்தில் அந்தந்த சங்கங்கள் தனித்தனியாக வழங்குவது.
* பிரச்சார சுவரொட்டிகளை கூட்டு நடவடிக்கை சங்கங்களின் பெயரால் அந்தந்த அமைப்புகள் தனித் தனியாக கொண்டு வருவது.
* திட்டமட்டத்தில் எங்கெல்லாம் வாய்ப்புகள் உள்ளதோ அங்கெல்லாம் இணைப்பை உத்தரவாதப்படுத்தி சுற்றறிக்கை, நோட்டீஸ் போட்டு நுழைவாயிற் கூட்டங்களையும், கூட்டுப்பிரச்சாரங்களையும் நடத்துவது என்பன போன்ற முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
* வேலை நிறுத்த நோக்கங்களை விளக்கி சென்னை, திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 மையங்களில் மாநில தலைவர்கள் கலந்து கொள்ளும் வேலை நிறுத்த ஆயத்த மாநாடுகளை நடத்துவது.
* கூட்டுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் சம்மந்தமாக அனைத்து சங்க தலைவர்கள் கையொப்பமிட்ட கூட்டறிக்கை இத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.
* கூட்டுக் கூட்டத்தின் முடிவுகள் 18.1.2013 சில முக்கிய நாளிதழில் வெளிவந்துள்ளது.
* பிப்ரவரி 20 -21 வேலை நிறுத்த பிரச்சாரத்திற்கு பயன்படும் வகையில் சிஐடியு மாநில மையத்தால் கொண்டு வரப்பட்ட சிறு பிரசுரமும் இணைக்கப்பட்டுள்ளது.
* வேலை நிறுத்தத்தையொட்டி மின் ஊழியர் மத்திய அமைப்பு தனியான சுவரொட்டியும் கொண்டு வர உள்ளது.

தோழர்களே,

பிப்ரவரி 20 - 21 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்கிட மாநில மையத்தில் இருந்து அனுப்பப்படும் துண்டுப் பிரசுரம், சுவரொட்டி, சங்கங்களின் கையொப்பமிட்ட கூட்டு சுற்றறிக்கை இவைகளை பயன்படுத்தி திட்டமட்டத்தில் கையொப்பம் இட்டுள்ள தொழிற்சங்கங்கள் மத்தியில் கூட்டு நடவடிக்கையை உருவாக்கி இந்த வேலை நிறுத்தத்தை மின் வாரியத்தில் வெற்றிகரமாக்கிட அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**குறிப்பு:**

1) மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு 2013 பிப்ரவரி 9 - 10 தேதிகளில் நடைபெற உள்ளது. இடமும், நிகழ்ச்சி நிரலும் பின்னர் அறிவிக்கப்படும்.

2) 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை 21000த்திற்கு உண்டான ஈவுத் தொகையே மாநில மையத்திற்கு வந்துள்ளது. நமது 2011 ஆம் ஆண்டு இலக்கை அடைய வேண்டுமானால் கூட இன்னும் 8000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை புதுப்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதனால் இனியும் கால தாமதமின்றி 2012 ஆம் ஆண்டு உறுப்பினர் புதுப்பித்தலுக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கையில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் : 158 / CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு : CITU & EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005

Telephone No: 044-28548529 Email: coteecitu_hqchennai@yahoo.com
Fax No: 044-28516574 coteecitu@gmail.com

CITU


**சுற்றறிக்கை எண் 3/2013** **நாள் : 24/1/2013**

*பெறுநர்*
*மத்திய அமைப்பின் அனைத்து நிர்வாகிகள்,*
*கிளைச் செயலாளர்கள் மற்றும்*
*மாநில செயற்குழு உறுப்பினர்கள்.*

## மாநில செயற்குழு கூட்டம்
## 2013 பிப்ரவரி 9 - 10 / சென்னை

அன்பான தோழரே!, வணக்கம்.

மத்திய அமைப்பின் **மாநில செயற்குழு கூட்டம் சென்னையில், எதிர்வரும் 2013, பிப்ரவரி 9 -10 சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (இருநாட்கள்)**

**நிகழ்ச்சி நிரல்**

1. அஞ்சலி
2. தலைவர் உரை
3. சிஐடியு-வின் முடிவுகள் (தோழர் ஆர்.கருமலையான்)
4. மாநில மாநாடு பரிசீலனை
5. நிர்வாகிகள் வேலை பங்கீடு
6. சிஐடியு-வின் அகில இந்திய மாநாட்டு பிரதிநிதிகள் தேர்வு
7. 2013 பிப்ரவரி 20, 21 வேலை நிறுத்த தயாரிப்பு
8. 05.03.2013 போராட்ட திட்டமிடல்
9. 2012, டிசம்பர் வரையிலான மத்திய அமைப்பின் வரவு - செலவு கணக்கு
10. இதர பிரச்சனைகள்

**நேரம் :** **காலை 10.00 மணிக்கு**

**இடம் :** **வி.பி.சி. நினைவகம்**
சி.ஐ.டி.யு. - தென் சென்னை
மாவட்டக்குழு அலுவலகம்
எண். 11,
லாயர் ஜெகந் நாதன் தெரு
கிண்டி,
சென்னை 600 032.
தொலைபேசி 23652252

என்ற முகவரியில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் மாநில சி.ஐ.டி.யூ.-வின் சார்பாக உதவிப் பொதுச் செயலாளர் தோழர் ஆர். கருமலையான் கலந்து கொள்கிறார்.

இரண்டு நாட்கள் கூட்டம் என்பதால் தோழர்கள் உரிய நேரத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.எஸ். சுப்பிரமணியன்)**
பொதுச் செயலாளர்.

**கூட்டத்திற்கு வருவோர் கவனத்திற்கு**

தென் மாவட்டங்களிலிருந்து வரும் தோழர்கள் **ஆசர்கான் - பஸ்ஸ்டாப்** (கிண்டி மேம்பாலம் முன் பஸ் ஸ்டாப்) இறங்கி எதிர்புறம் உள்ள **பாலாஜி மருத்துவமனையின்** பக்கத்து தெரு தான் மாவட்டக்குழு அலுவலகம்.

ரயில் மூலம் வருபவர்கள் தாம்பரத்தில் இறங்கி **தாம்பரம் To பீச்** போகும் ரயிலுக்கு மாறி கிண்டி ரயில் நிலையத்தில் இறங்கி கூட்டம் நடைபெறும் இடத்திற்கு நடந்தே வரலாம். (ஷேர் ஆட்டோ வர ரூ.5/- மட்டும் பாலாஜி மருத்துவமனை என்று கேட்டு இறங்கிவிடவும்)

கோவை, ஈரோடு, சேலம் மார்க்கத்திலிருந்து ரயில் மூலம் வருபவர்கள் சென்டரலிலிருந்து **பீச் To தாம்பரம்** போகும் ரயிலில் ஏறி கிண்டியில் இறங்கி நடந்தே வரலாம்.